# செய்திகளும் குறிப்புகளும்

**28.09.2023, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1023**

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**9. நாகரீகமும் பண்பாடும்**

இருப்பினும், அவையனைத்திற்கு இடையேயும் அவன் பண்பாடு மற்றும் மனவாழ்க்கைபற்றி சில குறிப்பிட்ட விரிவான கருத்துகளை வகுத்தமைத்துள்ளான். மேலும் அவற்றைப்பற்றிய அவனுடைய முரண்பட்ட கருத்துகள் அவனுடைய இயற்கைப் பிரிவினையால் தீர்மானிக்கப்பட்ட, சிலகுறிப்பிட்ட வழிகளைப் பின்பற்றுகின்றன. மேலும் ஒரு தனிப்பட்ட தரத்தையோ அல்லது முழுமையான ஒத்திசைவையோ அடையும் வண்ணம் செய்யப்படும் பல்வேறு முயற்சிகளின் ஒரு பொதுவான ஒழுங்குமுறை வளைவுகளால் வடிவமைக்கப்படுகின்றன.

முதற்கண் நாகரிகத்திற்கும் காட்டுமிராண்டித்தனத்திற்கும் இடையே உள்ள மாறுபாடு உள்ளது. நாகரிகம் என்பது அதன் பொதுவான பொதுமக்களுக்குப் புரிந்த உணர்வில், நட்புறவுள்ள சமுதாய அமைப்பு - கட்டுப்பாடு, காவல் துறைப்பாதுகாப்பு, அமைப்பாண்மை, கல்வியறிவுடைமை இவைகளையும் இவற்றைச் சார்ந்த சாதனங்களையும் உடைய சமுதாய அமைப்பு இதற்குமாறாக இந்த வசதிகளைப் பெற்றிராத சமுதாயம் அல்லது அவ்வாறு கருதப்படும் சமுதாயம் அநாகரிகமானது என்று கொள்ளப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பொருளில், செவ்விந்தியர், பஸீடோக்கள், பிஜீத்தீவினர் இவர்கள் அனைவரும் அவர்களுடைய நாகரிகத்தைப் பெற்றிருந்தனர்; அவர்களுடைய சமுதாயம் விடாக் கண்டிப்புடைய, ஆனால் எளிமையாக இணைத்து உருவாக்கப்பட்ட சமுதாயமாக இருந்தது, மேலும் ஒரு சமுதாயச்சட்டம், சில ஒழுக்கநெறிக்கருத்துக்கள், ஒரு மதம், ஒருவகையான பயிற்சி, - தற்கால நாகரிகத்தில் இல்லாத அதன்குறைபாடு என்று சொல்லப்படும் அத்தகை பல நற்பண்புகள் பெற்றிருந்தன. ஆனால் நாம் அவர்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் அழைப்பதை ஒப்புக் கொண்டுள்ளோம். ஏனென்றால் அதற்கு அவர்களுடைய முதிராத முதல் நிலையில் உள்ள மற்றும் வரையறைக்குட்பட்ட அறிவு, அவர்களுடைய கருவிகளின் முதிரா முதல்நிலை, அவர்களுடைய வெறும் எளிமையான சமுதாய அமைப்புமுறை இவையே காரணம் எனத் தோன்றுகிறது. அதிக வளர்ச்சியடைந்த சமுதாய நிலையில், நாம் அரைநாகரிகமானது, அரைக்காட்டுமிராண்டித் தனமானது என்னும் அடைமொழிகளால் சிலவகைப்பட்ட நாகரிகங்கள் ஒன்றுக்கொன்று அழைத்துக் கொள்வதைக் காண்கிறோம்; - இந்த விஷயத்தில் எந்த ஒரு காலத்தில் எது மிக ஆதிக்கம் செலுத்துவதாகவும், தூலமான முறையில் வெற்றியார்ந்ததாகவும் இருக்கிறதோ அதுவே இயற்கையாக உரத்த குரலில் மற்றும் தன்னம்பிக்கையுடன் முடிவு செய்வதாக இருந்தது. முற்காலத்தில் மக்கள் மிகவும் நேர்மையானவர்களாக மற்றும் எளிய மனத்தினராக இருந்தனர், ஆகையால் அவர்கள் பொதுப்பண்பாட்டில் தங்களினும் மாறுபட்ட அனைவரையும் காட்டுமிராண்டிகள் அல்லது மிலேச்சர்கள் என்று ஒளிவு மறைவின்றித் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர். இவ்வாறு பயன்படுத்தப்பட்ட நாகரிகம் என்ற சொல்லுக்கு வெறும் சார்புடைய பொருள், அல்லது இதற்கு எத்தகைய நிலைத்தபொருளும் இல்லை என்று கொள்ளலாம். ஆகையால் நாம் அதில் உள்ள தற்காலிகமான அல்லது தற்செயலான அனைத்தையும் ஒழித்துக் கட்டி, காட்டுமிராண்டித் தனம் என்பது மனிதன் அனேகமாக அவனுடைய உயிராற்றலுக்கும் மற்றும் உடலுக்கும் அவனுடைய பொருளாதார மற்றும் தூல வாழ்விற்கும் முழுமையாகத் தன்னை கவனம் செலுத்தும் ஒரு சமுதாய நிலை- முதலில் அவற்றின் போதுமான பராமரிப்பு, இன்னும் அவற்றின் மேன்மையான அல்லது செழிப்பான நலம் அன்று. மேலும் அவனுடைய மனத்தை ஈடுபடுத்தி வளர்த்துக்கொள்ளச் சில வழிவகைகளும் சிறிதளவே விருப்பமுடைமையும் ஆகும். அதே சமயம் இதற்கு மாறாக நாகரிகம் என்பது இதைவிட வளர்ச்சிபெற்ற சமுதாயநிலையும், அதில் ஒருபோதுமான சமுதாய மற்றும் பொருளாதார அமைப்போடு, அதன் அனைத்துப்பகுதியிலும் இல்லாவிடினும் அதன் பெரும்பகுதியில் மனவாழ்வின் செயல்பாடும் ஆகும்; ஏனென்றால் சில நேரங்களில் சிலபகுதிகள் அவற்றின் செயற்பாடின்மையால் ஒதுக்கித்தள்ளப்படுகின்றன, அல்லது ஊக்கங்கெட வைக்கப்படுகின்றன, அல்லது தற்காலிகமாக மெலியவைக்கப்பட்டு வலுக்குறைக்கப்படுகின்றன; இருப்பினும் அந்த சமுதாயம் நாகரிகம் உடையதாக அல்லது மிக உயர்ந்த நாகரிகம் உடையதாகக் கூட இருக்கலாம். இந்தக் கருத்து சரித்திர காலத்திற்கு முந்தையதும் சரித்திர காலத்ததுமான அனைத்து நாகரிகங்களையும் அதன் கீழ்கொண்டு வந்துவிடும்; மேலும் அனைத்துக் காட்டுமிராண்டித் தனத்தையும் அவை ஆப்பிரிக்காவினுடையதாகவோ அல்லது ஐரோப்பாவினுடையதாகவோ அல்லது ஆசியாவுடையதாகவோ அல்லது ஹூணர்களுடையதாகவோ அல்லது முற்கால ஜெர்மானிய இனத்தவர்களுடையதாகவோ (Goth) அல்லது ரோமானியப் பேரரசைப் படையெடுத்தழித்த முரட்டு ஜெர்மானிய இனத்தவர்களுடையதாகவோ (vandals) அல்லது துருக்கியருடையதாகவோ இருந்தாலும் ஒதுக்கித் தள்ளிவிடும். ஒரு காட்டுமிராண்டி நிலையில் நாகரிகத்தின் செப்பமுறாத தொடக்க நிலை இருக்கும் என்பது தெளிவு, ஒரு நாகரிக சமுதாயத்தில் மிகப் பெரிய அளவிலான காட்டுமிராண்டித்தனம் அல்லது அவற்றின் எண்ணிலடங்கா நினைவூட்டுச் சின்னங்கள் இருக்கும் என்பதும் தெளிவானதுதான்; அந்தப் பொருளில் அனைத்து சமுதாயங்களும் அரை-நாகரிகம் உடையவையே. நம்முடைய தற்கால நாகரிகத்தில் எத்துணையளவு வியப்புடனும், வெறுப்புடனும், அதைவிட அதிக வளர்ச்சியடைந்த மன்பதையால், ஒரு குறைபாடுடைய நாகரிகயுகத்தின் மூடநம்பிக்கைகள், கொடுமைகள் என்று பின்னோக்கிப் பார்க்கப்படும்! ஆனால் மிக முக்கியமான நோக்கம் இதுதான். அது நாம் நாகரிகம் என்றழைக்கும் எந்த சமுதாயத்திலும் மனிதனுடைய மனத்தன்மை செயல்பாடுடையதாக இருக்க வேண்டும் என்பதாம், அவனுடைய மனநாட்டங்கள் வளர்ச்சியடைந்தவையாக இருக்க வேண்டும். மேலும் அவனுடைய மன ஜீவனால் செய்யப்பட்ட அவனுடைய வாழ்க்கையின் ஒழுங்கும் மற்றும் முன்னேற்றமும் அவனுடைய சிறப்பான மனத்தின் ஒரு தெளிவான தன்னுணர்வுள்ள கருத்தாக இருத்தல் வேண்டும்.

ஆனால் ஒரு நாகரிக சமுதாயத்தில் பாதியளவேயான, பக்குவமுறாத நிலையிலுள்ள, சம்பிரதாயமான நாகரிகமானவர்கள் மற்றும் பண்பாடுடையவர்கள் என்னும் வேறுபாடு உள்ளது. ஆகையால் நாகரிகத்தின் பொதுவான நலன்களில் பங்கேற்பது மட்டுமே ஒரு மனிதனை அவனுடைய சரியான மனவாழ்வுக்கு உயர்த்தப் போதுமானதன்று எனத் தோன்றுகிறது; அதனினும் அதிகரித்த வளர்ச்சி, ஒரு மேன்மையான உயர்ச்சி தேவைப்படுகிறது. முந்தைய தலைமுறை பண்பாடுடைய மனிதனுக்கும் பிலிஸ்தீனியன் அல்லது பண்பாடற்றவனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அழுத்தந்திருத்தமாக வரைந்துள்ளது; மேலும் அதனால் பெறப்படும் பொருள் என்ன என்பதைப் பற்றிய ஏறத்தாழத் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தது. பிலிஸ்தீனியன் அல்லது பண்பாடற்றோன் தோராயமாக அவனுடைய புறத்தோற்றத்தில் நாகரிக வாழ்க்கையை வாழ்பவன், நாகரிகத்தின் அனைத்துப் பரிவாரங்களையும் உடையவன், நடப்பிலுள்ள பொதுவழக்கான எண்ணங்கள். தப்பெண்ணங்கள், சம்பிரதாயங்கள், உணர்ச்சிகள், இவற்றையுடையவன் மற்றும் இவற்றை உரத்துப்பேசுபவன், ஆனால் கருத்துகளுக்கு மூளையில் இடங்கொடாதவன், சுதந்தரமான அறிவாற்றலைக் கையாளாதவன், அழகு மற்றும் கலைபற்றியறியாதவன், மதம், ஒழுக்கவியல், இலக்கியம் முதலிய அவன் தொடும் அனைத்தையும் கொச்சைப்படுத்துபவன் ஆவான். பிலிஸ்தீனியன் உண்மையிலேயே நவீன நாகரிகக் காட்டுமிராண்டி; அவன் அவனுடைய உடல் வாழ்க்கைக்கும் அவனுடைய பிராணத்தேவைகள் உள்ளுந்துதல்களின் வாழ்க்கைக்கும் அறிவற்ற பற்றுதலுடன் கூடிய அரைநாகரிகத் தூல மற்றும் பிராணத்துவக் காட்டுமிராண்டி, மேலும் வெறும் குடும்ப மற்றும் பொருளாதார மனித விலங்கின் இலட்சியத்தை உடையவன்.

*(தொடரும்......)*

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: செப்டம்பர் 29, வெள்ளிக்கிழமை, இரவு 8.00 மணிக்கு**, **"துல்பன்" (TULPAN)** அசல் தலைப்பு இரஷ்ய மொழியில் **தையூப்பன்** (Tyulpan), ***இயக்கம்*** - செர்ஜி டுவோர்ட்சேவோய், கஜகஸ்தான், 2008.

அக்டோபர் **06, வெள்ளிக்கிழமை, இரவு 8.00 மணிக்கு, "ஃபுல் டைம்" (FULL TIME)**, அசல் தலைப்பு (À PLEIN TEMPS) ***இயக்கம்*** **- எரிக் கிராவல்,**, பிரான்சு, 2021. *நடிப்பு: லோர் கலமி.*
இது ஒரு பிரஞ்சு மொழிப்படம், ஆங்கில துணை வாசகங்களுடன், *காலம்:* 1 மணிநேரம் 28 நிமிடம்.

---



**கனவு தெய்வீகம் தொடர்** (Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**அக்டோபர் 4 புதன்கிழமை, மாலை 4.30 - 5.30 வரை,**
**"ஆஸ்தர் படேலுடன் நேர்காணல்"**
**நேர்காணல் - நாரத்**
பதிவு செய்யப்பட்ட வீடியோக் காட்சி.

சாவித்திரி பவனில் உள்ள சங்கம் ஹால்
அனைவரும் வருக.

---

**கேப்பொயிரா பயிற்சிப்பட்டறை** (Capoeira workshop)

தீபனம் பள்ளியில் கேப்பொயிரா பயிற்சிப்பட்டறையை யூத்லின்க் ஏற்பாடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்!

**06-10-2023 வெள்ளிக்கிழமை - நடத்துபவர்கள் : ஜிங்கா சரோபா குழுவினர்.**
**பயிற்சிப்பட்டறை நேரம் - காலை 9.30 - நண்பகல் 12 மணி மற்றும் பிற்பகல் 2 - மாலை 4 மணி.**

பதிவுசெய்ய youthlink@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும். அல்லது காலை 9.30 முதல் நண்பகல் 12 மணி மற்றும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரை டவுன் ஹாலில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து பதிவு செய்யவும். *யூத்லின்க்*

---

**பாட்டுப்பாடும் விழா** (Singing Festival)

அன்பார்ந்த இசை ஆர்வலர்களே,
அக்டோபர் 14 மற்றும் 15 ஆகிய நாட்களில் கிரிபாவில் ஆரோவில் பாட்டுப்பாடும் விழாவை நடத்த நாங்கள் ஏற்பாடு செய்து வருகிறோம். இவ்விழாவின் கருப்பொருள் "சிங்கிங் ஹார்ட்ஸ் ஆஃப் ஆரோவில்" (Singing hearts of Auroville) என்பதுடன், ஆரோவில்வாசிகளின் குரல்களின் மூலம் அழகிய பன்முகத்தன்மையில் ஒற்றுமையை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும். 2023-இல் கலைநிகழ்ச்சிகளுக்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதால், 0250 ஆரோவில் ஆர்ட்ஸ் குழு என்ற நிதிச்சேவை கணக்கு எண்ணிற்கு நன்கொடை அளித்து ஆதரிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
அன்புடன், *ஷக்தி, மார்த்தா, அந்துவான், ஒக், ரால்ஃப்*

**<u>பவ்லா மற்றும் மார்னிங் ஸ்டார் குழுவின் விளக்கக்காட்சி</u>**
<u>(Presentation By Paula and Morning Star Team)</u>

**விளக்கக்காட்சி தலைப்பு: ஒருங்கிணைந்த சுதந்திரம் என்பது பிறப்புச் சுதந்திரத்தையும் உள்ளடக்கியது.**
**வழங்குவோர்: பவ்லா மர்பி மற்றும் மார்னிங் ஸ்டார் குழு**

**நாள்: 05.10.2023, வியாழன் அன்று.**
**இடம்: மல்டிமீடியா சென்டர் (டவுன் ஹால், ஆரோவில்)**
**நேரம்: மாலை 4 - 6:30 மணி வரை**

மார்னிங் ஸ்டார் என்பது ஹெல்த் அண்ட் ஹீலிங் (உடல்நலம் மற்றும் குணப்படுத்தும்) டிரஸ்டின் கீழ் செயல்படும் ஒரு பிரிவாகும், இது ஆரோவில்லில் உள்ள தாய்மார்களின் கர்ப்பக் காலம், பிரசவம், அவர்களின் ஆரோக்கிய பராமரிப்புக்காக மருத்துவச்சிகள் (மிட்ஒய்வ்ஸ்), மகப்பேறில் உதவ முறைப்படி கற்ற செவிலியர்கள் ஆகியோரால் நடத்தப்படுகிறது. எங்களது சேவைகளில் ஆலோசனைகள், வகுப்புகள் உட்பட மரியாதைக்குரிய மகப்பேறு பராமரிப்பு, தந்தையின் ஈடுபாடு போன்ற தலைப்புகளில் ஆய்வு செய்யப்படுகிறது.

"ஒருங்கிணைந்த சுதந்திரம் என்பது பிறப்புச் சுதந்திரத்தையும் உள்ளடக்கியது" என்ற தலைப்பில் இந்த விளக்கக்காட்சியானது ஸ்ரீ அரவிந்தர் விவரித்தபடி சுதந்திரம் என்ற ஆன்மீகக் கருத்தாக்கத்தின் தொடர்பையும், ஆரோவில்லில் மகப்பேறு காலத்தில் உள்ள தாய்மார்களுக்கு அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்வதும் இதன் நோக்கமாகும். இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள உலகளாவிய மனித உரிமைகளும் பெண்களின் உரிமைகளும் இதில் அடங்கும். விளக்கக்காட்சியின் முடிவில் இக்குழு ஆரோவில்லில் பிரசவங்கள் பார்ப்பதற்கான அவர்களது கனவு பற்றிய பார்வையை முன்வைக்கும்.

விளக்கக்காட்சியில் சமூகத்தினர் அனைவரும் கலந்துகொள்ளலாம், பார்வையாளர்கள் 15+ வயதுக்கு மேற்பட்ட பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் ஆகியோரே எங்களது இலக்கு ஆகும் - எனவே இதை பெற்றோர்கள் தங்கள் கவனத்தில் கொள்ளவும்.
தங்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் வரவேற்கிறோம்!

**<u>சேர்ந்திசைத்தல் 30 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுதல்</u>**
<u>(Celebrating 30 years of singing together)</u>

**ஆரோவில் கோயர் (பாடகர்கள்) பாடுகிறார்கள்**
**விருப்பமான கிளாசிக்கல் பாடல்கள்**
**30.09.2023, சனி - 01.10.2023, ஞாயிறு ஆகிய நாட்களில்**
**இரவு 8 மணிக்கு, கிரிபாவில் நடைபெறுகிறது.**
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்!

*அனைவரும் தங்கள் கார்கள், மோட்டார் பைக்குகளை கயா ஃபிரிஸ்பீ மைதானத்தில் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். கிரிபா அமைந்துள்ள பகுதியில் சைக்கிள்கள் நிறுத்த அனுமதிக்கப்படும். மைதானத்திற்கு செல்ல, கயா செல்லும் சாலையில் இடதுபுறம் திரும்பவும். இந்த இசை நிகழ்ச்சியின்போது கலாபூமி மற்றும் கயா (கிரிபா வழியாக) இடையே போக்குவரத்தை தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தங்கள் புரிதலுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி.*

**<u>நுழைவுச் சேவையின் அறிவிப்பு, ES#199, தேதி: 28-09-2023</u>**

நமது சமூகத்தில் சேர பின்வரும் நபர்கள் நுழைவு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சாத்தியமான புதிதாய்ச்சேர்ந்தவர்கள், ஆரோவில்லின் கூட்டாளிகள், நண்பர்கள் பற்றிய உங்கள் கருத்துக்களை 2 வாரத்திற்குள் பகிர்ந்து கொள்ளவும். சாத்தியமான ஆரோவில்வாசிகள், திரும்பிவரும் ஆரோவில்வாசிகள், இளைஞர்கள், ஒரு ஆரோவில்வாசியின் துணைவர்/பார்ட்னர் ஆகியோர் பற்றிய கருத்துக்களை 4 வாரத்திற்குள்ளும் auroville.entryboard@gmail.com அல்லது auroville.entryservice@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும். உங்களது கருத்துகளுக்கு முன்கூட்டியே நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

<u>புதிதாய்ச்சேர்ந்தோராக அறிவிக்கப்படுகிறது:</u>
**கேத்தரின் ரெனே ஃபோச்** (தென்னாப்பிரிக்கா) - மைத்ரேயில் (மார்ட்டின் வீடு) தங்கியுள்ளார், சமஸ்கிருதம் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரிகிறார்.
**மலாயிகா ஜோஷி** (இந்தியா) - டிசிப்பிளினில் (ஜோஸ்டர் வீடு) தங்கியுள்ளார், பராக்காவில் பணிபுரிகிறார்.
**மிகைல் சோகோலின்** (இரஷ்யா) - கல்பனாவில் தங்கியுள்ளார், லாஸ்ட் ஸ்கூலில் பணிபுரிகிறார்.
**பிரியங்கா** (இந்தியா) - ஆர்காவில் தங்கியுள்ளார், ஆரோக்கியா ஜகேரில் பணிபுரிகிறார்.
**ஷாஹீன் பாத்திமா** (இந்தியா) - ஹியுமிலிட்டியில் (லாமோ வீடு) தங்கியுள்ளார், ஸ்வரத்தில் பணிபுரிகிறார்.
**ஷைலி ஷா** (இந்தியா) - பிரயாத்தனா (மேரி வீடு) தங்கியுள்ளார், நந்தனம் கிண்டர்கார்டனில் பணிபுரிகிறார்.
**விக்டோரியா போனேயூ** (பிரான்சு) - ஸ்வீடமில் தங்கியுள்ளார், பிசிசி அலுவலகத்தில் பணிபுரிகிறார்.

<u>புதிதாய்ச்சேர்ந்தோராக உறுதி செய்யப்படுகிறது:</u>
**லட்சுமி ரஜினிகாந்த்** (இந்தியா), **பொன்னியம்மாள் வெங்கடேசன்** (இந்தியா), **செர்ஜி நிகோலேவ்** (இரஷ்யா),
**யுவனா ஜெயலசாமி** (இந்தியா)

தங்களின் நுழைவு வாரியம், (அலென், கிரேஸ், ஜெயந்தி, இலட்சுமணன், மடில்ட், சாரா, சோனியா, ஸ்வாதா)
நுழைவுச் சேவை திறந்திருக்கும் நேரம்: திங்கள், புதன், வெள்ளி - காலை 9:30 - 12:30 மணி வரை / செவ்வாய் & வியாழன் - பிற்பகல் - 2:30 - 4:30 மணி வரை - புதிதாய்சசேர்ந்தோர் கிட் வழங்கப்படும்.
தொலைபேசி எண்: (0413) 262-2707 மின்னஞ்சல் முகவரி : auroville.entryservice@gmail.com

**பாரத் நிவாஸ் வழங்கும் - பாலி** (Bharat Nivas presents - Bali)
**இராமாயணத்தில் இருந்து குரங்கு சகோதரர்களின் வேடிக்கையான கதை**
**இடம்: ஸ்ரீ அரவிந்தர் அரங்கம்**
**தேதி: 30-09-2023. சனிக்கிழமை**
**நேரம்: மாலை 7 மணி, காலம்: 1 மணிநேரம்**
**தொடர்புக்கு: கிருஷ்ணா - 9787-880211.**
பாரத் நிவாஸ் மெயின் கேட்டிற்கு வெளியே பார்க்கிங் உள்ளது.

**சாவித்ரி பவனில் வழக்கமான செயல்பாடுகள்** (Regular Activities in Savitri Bhavan)

**ஞாயிறுதோறும் காலை 10.30-12 மணி:** லாரி சீட்லிட்ஸ் தலைமையிலான *சாவித்ரி* படிப்பு வட்டம்.
**திங்கள்தோறும் பிற்பகல் 3-4 மணி:** *Self-Surrender in Works – The Way of Gita* - தலைமை: டாக்டர் ஜெய்சிங்.
**செவ்வாய்தோறும் பிற்பகல் 3-4 மணி:** *Readings of the words of The Mother on Aims and Ideals of Auroville* - தலைமை: டாக்டர் ஜெய்சிங்.
**செவ்வாய், வெள்ளி, சனி மாலை 4-5 மணி :** *L'Agenda de Mère***:** கங்காலட்சுமியுடன் ஒலிப்பதிவுகளைக் கேட்டல்.
**செவ்வாய்தோறும் மாலை 4.30 மணி:** ஆனந்தி தலைமையில் *முத்ரா-சி*.
**செவ்வாய்தோறும் மாலை 5.30-7.00 மணி:** நாரத் தலைமையில் *ஓம் கோயர்*.
**வியாழன்தோறும் மாலை 4-5 மணி:** ஷ்ரத்தாவன் தலைமையிலான வீடியோக்கள் - *The English of Savitri*.
**வெள்ளிதோறும் பிற்பகல் 3-4:** டாக்டர் ஜெய்சிங் தலைமையில் *'The Triple Soul-Forces'* of *Savitri* - வாசிப்பு மற்றும் ஆய்வு.
**சனிதோறும் மாலை 4.30-6:** ஆஷேஷ் ஜோஷி தலைமையில் *சத்சங்கம்*.

*கண்காட்சிகள், பிரதான கட்டிடம் மற்றும் அலுவலகம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை 9-5 மணி வரை திறந்திருக்கும்.*
*நூலகம் மற்றும் டிஜிட்டல் நூலகம் திங்கள் முதல் வெள்ளி வரை 9-5 மணி வரை திறந்திருக்கும்.*
*அனைவரும் வருக.*

***ஹார்ட் வீவிங்* அறிவிப்பு** (*Heart Weaving* Announcement)

அன்பார்ந்த நண்பர்களே,
உங்களில் சிலருக்கு நினைவிருக்கலாம், கடந்த ஆண்டு டிசம்பரில் ***ஹார்ட் வீவிங்*** தொடங்கப்பட்டது. இது ஆரோவில்லில் உரையாடலுக்கான நமது திறனை ஆழப்படுத்தவும், வெவ்வேறு கண்ணோட்டங்கள் மற்றும் கருத்துக்களில் ஒருவருக்கொருவர் உண்மையாக கவனமுடன் கேட்கவும் முடியும். இந்தச் செயல்முறையை ரகு அனந்தநாராயணன் அவர்கள் தொகுத்து வழங்கினார். ஏறக்குறைய 30 ஆரோவில்வாசிகள், மற்றும் புதிதாய்சேர்ந்தவர்கள் இதில் பங்குபெற விருப்பம் தெரிவித்தனர். கடந்த பத்து மாதங்களாக நாங்கள் ***சமுத்திர மந்தன்/தி கிரேட் சர்னிங்கை*** ஆராய்ந்து வருகிறோம், மேலும் இது நம் ஒவ்வொருவருக்குள்ளும் அதன் விளைவாக ஆரோவில்லிலும் எப்படி செயல்படுகிறது என்பதையும் விரிவாக ஆராய்ந்து வருகிறோம்,.

***ஹார்ட் வீவிங்*** என்பது பயிற்சியை ஆதரிப்பதற்கும் வளர்ப்பதற்கும் முக்கிய இடமாகும். இதன் உணர்வில், எங்களில் சிலர் ஆழமான உரையாடலை செயல்படுத்துவதற்கும், பாலங்களை உருவாக்குவதற்கும் சிறிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம், மேலும் எங்கள் கற்றல் மற்றும் சவால்களை அனைவரும் கற்றுக்கொள்ளும் வகையில் மீண்டும் இக்குழுவிற்கு கொண்டு வந்துள்ளோம்.
நாங்கள் இப்போது வட்டத்தை விரிவுபடுத்தவும், புதிய உறுப்பினர்களை செயல்பாட்டிற்குள் கொண்டு வரவும் தயாராக உள்ளோம். ஆரோவில்லில் நீண்டகாலமாக வசிப்பவர், நல்லிணக்கத்தை விரும்பி, ஸ்ரீ அன்னையின் கனவுக்கு சேவை செய்வதில் உண்மையிலேயே ஆர்வமுள்ளவர், இப்பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பது வரவேற்கத்தக்கது. முன்னோக்கிச் செல்லும் ***ஹார்ட் வீவிங்***கில் பங்கேற்க உங்களுக்கு விருப்பம் இருந்தால், **அக்டோபர் 4ஆம் தேதிக்குள்** எங்களைத் தொடர்பு கொள்ளவும். மேலும் விவரங்கள் மற்றும் அடுத்த படிகள் குறித்து தொடர்பில் இருக்கும் நண்பர்களுடன் நேரடியாகப் பகிரப்படும்.

மின்னஞ்சல்: heartweaving.auroville@gmail.com தொலைபேசி: (+91) 94895-27893 (தயவுசெய்து வாட்ஸ்ஆப்/டெலிகிராம் மட்டும்).
அன்புடன், டெவன், கார்லா, சுஜி, ஐரிஸ், சுதா, பி, ஜியோவானி, அலெக்ஸி, நவீன் மற்றும் பலர். ***ஹார்ட் வீவிங் சார்பாக)***

---



**லியோ மைக்கேல் போஸ்மேன்** (Leo Michael Boseman)

லியோ அவர்கள் தமது குழந்தைப் பருவத்தின் பெரும்பகுதியை ஆரோவில் மற்றும் பாண்டியில் கழித்தார். ஓர் ஆண்டிற்கு முன்பு திரும்பிவந்து, ஆரோவில்லில் மீண்டும் சேருவதற்கான செயல்முறையைத் தொடங்கினார்.
செப்டம்பர் 22 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல், லியோ ஒரு சாலை விபத்தில் சிக்கி, ஜிப்மருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் அவர் ஐசியு-வுக்கு மாற்றப்பட்டார். செப்டம்பர் 23 சனிக்கிழமை இரவு 11.10 மணியளவில் அவர் காலமானார்.
லியோ அவர்களின் உடல் ஃபேர்வெல்லுக்கு எடுத்துச்செல்லப்பட்டது, அங்கு அவரை அறிந்தவர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

அவரது சகோதரி மலைகாவின் விருப்பப்படி, அவர்கள் குழந்தைகளாக இருந்தபோது பராமரித்த குடும்பத்தினர் ஏற்பாடு செய்தபடி செப்டம்பர் 27 புதன்கிழமை பாண்டி கருவடிக்குப்பம் தகன மைதானத்தில் நடைபெற்றது. அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக. *ஓம்*~

---